**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**OS No.25/2022**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 21-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Examination of PW.4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பழனியப்பன் | தந்தை பெயர் | பொன்னுச்சாமி |
| கிராமம் | கந்தர்வகோட்டை | தாலுகா | கந்தர்வகோட்டை |
| சமயம் | இந்து | ஜாதி | |
| வயது | 60 | தொழில் | வியாபாரம் |

நாள் : 21.09.2024
வா.சா.4
<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1) வாதி எனது உறவினர் என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி சுரேந்திரபாபுதான் என்னை சாட்சியம் அளிக்க சொல்லி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு தெரிந்த விபரங்களை சொல்வதற்காக வந்தேன்.

2) கந்தர்வகோட்டையில் ரெத்தினசாமி செட்டியாருக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்றால் கோடிக்கணக்கான ரூபாய்க்கு சொத்து உள்ளது. அந்த சொத்துக்களுக்கு சர்வே எண் மற்றும் விஸ்திரணம் ஆகியவை எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரெத்தினசாமி செட்டியாருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் முத்துசாமி செட்டியார், இராமநாத செட்டியார், பாலசுப்பிரமணியன் செட்டியார், சந்திரசேகரன் செட்டியார் ஆகிய நான்கு பேர், அதில் பாலசுப்பிரமணியனை தவிர மற்ற மூன்றுபேரும் இறந்துவிட்டார்கள்.

3) முத்துசாமி செட்டியாருக்கு நடராஜன், தியாகராஜன், ராதாகிருஷ்ணன், வெங்கடேசன் , பிரபாகரன் ஆகியோரும் வாரிசுகள் இராமநாதனுக்கு சுவாமிநாதன் விவேகானந்தன், சிவானந்தன் வாரிசுகள் அதில் விவேகானந்தன் இறந்துவிட்டார். முத்துசாமி செட்டியாருக்கு எத்தனை வாரிசுகள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றாலும் வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது, சுமார் 4.50 சென்ட் இருக்கும். வழக்கு சொத்திற்கு பழைய மற்றும் புது எண் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்து ரெத்தினசாமி செட்டியாருக்கு சொந்தம் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் என் அப்பா, அம்மா அந்த இடம் ரெத்தினசாமிக்கு சொந்தமானது என்று சொன்னார்கள், நாங்கள் அந்த

இடத்தில் நாங்களும் மாடு கட்டியிருந்தோம், ரெத்தினசாமி வீட்டிலும் மாடு கட்டியிருந்தார்கள். கூட்டுறவில் ஏலம் எடுத்ததாக சொன்னார்கள், நானும் அந்த பத்திரத்தை பார்த்துள்ளேன். அந்த பத்திரத்தில் என்ன சர்வே எண் போட்டிருந்தது என்றால் எனக்கு எழுத்து புரியவில்லை.

4) வாதியின் அப்பாவிற்கு இந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் பாகத்தில் அவருடைய அப்பா 40 வருடங்களுக்கு முன்பு ஒதுக்கிவிட்டார். ரெத்தினசாமி செட்டியாரின் சொத்துக்களை 40 வருடங்களுக்கு முன்னர் பிரித்துக்கொண்டார்கள் என்று நான் சொல்கிறேனா என்றால் இந்த சொத்தை பிரித்துக்கொண்டார்கள் , பிரிக்காமலும் சொத்துக்கள் உள்ளது. ரெத்தினசாமி செட்டியார் 40 வருடங்களுக்கு முன்னர் எந்தெந்த சொத்துக்களை அவருடைய மகன்களுக்கு பிரித்துக்கொடுத்தார் என்றால் அதில் நான் கலந்துகொள்ளவில்லை , என் தந்தைதான் கலந்துகொண்டார், என்னிடம் விபரங்களை என் தந்தை சொன்னார். பாகப்பிரிவினையை எழுதிக்கொண்டார்களா என்றால் சிலவற்றை எழுதிக்கொண்டார்கள், சிலவற்றை வாய்மொழியாக பிரித்துக்கொண்டார்கள். அவர்கள் எழுதிக்கொண்டதை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் அதுபற்றி தெரியாது. அந்த ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன்.

5) முதல் விசாரணையில் நிரூபண வாக்குமூலத்திற்கு உள்ள தகவல்களை யார் சொன்னது என்றால் நான்தான் வழக்கறிஞரிடம் சொன்னேன். தாவா சொத்திற்கும் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் என் பூர்வீக வீட்டிற்கு அருகில் உள்ளது, தற்சமயம் நான் பக்கத்து தெருவில் குடியிருக்கிறேன். கடைசியாக வழக்கு சொத்திற்கு எப்போது சென்றேன் என்றால் சுமார் 1 மாதம் இருக்கும். தாவா சொத்தின் வீட்டிற்கு மின் இணைப்பு உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்து பஞ்சாயத்தில் வரி விதிப்பு ஏற்பட்டுள்ளது என்றால் மருத்துவர் (வாதி ) கட்டியுள்ளார். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது எனக்கு தெரியவில்லை. இதுநாள்வரைக்கும் பிரதிவாதி மங்கையற்கரசி பெயரில்தான் வரிவிதிப்பு ஏற்பட்டுள்ளது என்றாலும் நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா இடத்தில் மங்கையற்கரசி பெயரில் மின் இணைப்பு உள்ளது என்றாலும் அதை அவர் அனுபவித்து வருகிறார் என்றாலும் சரியல்ல. தாவா இடத்திற்கு மங்கையற்கரசி பெயரில்தான் குடிநீர் இணைப்பு உள்ளது என்றால் சரியல்ல. குடிநீர் இணைப்பு உள்ளது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

6) ரெத்தினசாமியோ, அவரது மகன்களோ, வாதியோ இங்கு குடியிருக்கவில்லை என்றாலும் தஞ்சாவூரில் குடியிருந்து வந்தார்கள் என்றாலும் சரிதான், அடிக்கடி

சொத்துக்களை வந்து பார்ப்பார்கள், எங்களையும் பராமரிக்க சொல்வார்கள். நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் அவ்வாறு நான் பராமரிக்கவில்லை என்றாலும் சரியல்ல.

7) மங்கையற்கரசியின் கணவர் எண்ணெய் ஆட்டி தொழில் செய்து வருகிறார் என்றால் அவரை தெரியும், அவர் செய்யும் தொழில் பற்றி தெரியவில்லை. ஆதிகாலத்திலிருந்து மங்கையற்கரசியின் கணவர் தாவா சொத்தின் ஒருபகுதியில் எண்ணெய் ஆட்டும் செக் வைத்து தொழில் செய்தும் மற்றொரு பக்கத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் எனக்கு தெரிந்த நாள்முதல் அவ்வாறு அவர்கள் எதுவும் செய்யவில்லை. நான் வேண்டும் என்றே வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.வாதியோ வாதியின் குடும்பத்தினரோ ஒருகாலத்திலும் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை என்றால் அவர்களுக்கு வீடு உள்ளதால் இருக்கவில்லை, ஆனால் நாங்கள்தான் பராமரித்து வந்தோம். நான் உடல்நிலை சரியில்லை என்றால் வாதியிடம்தான் சிகிச்சைக்கு செல்வேன் என்றால் சரியல்ல, நான் வேறு ஒரு மருத்துவரிடம் செல்வேன்.

**சாட்சியின் கையொப்பம்**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.ப.ரிஸானா பர்வீன்,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.